

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.06.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி–I க்கான பணிகளில் 21 துணை ஆட்சியர்கள், 26 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 25 உதவி ஆணையர்கள் (வணிக வரிகள்), 13 கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர்கள், 7 உதவி இயக்குநர்கள் (ஊரக வளர்ச்சி) மற்றும் 3 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள், என மொத்தம் 95 பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 14 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மனிதவள மேலாண்மைத் துறை செயலாளர் க.நந்தகுமார் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.06.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி–I க்கான பணிகளில் 21 துணை ஆட்சியர்கள், 26 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 25 உதவி ஆணையர்கள் (வணிக வரிகள்), 13 கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர்கள், 7 உதவி இயக்குநர்கள் (ஊரக வளர்ச்சி) மற்றும் 3 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள், என மொத்தம் 95 பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 14 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மனிதவள மேலாண்மைத் துறை செயலாளர் க.நந்தகுமார் ஆகியோர் உள்ளனர்.



சென்னை, தியாகராய நகரில், தமிழ்நாடு அரசின் சார்பில், சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் அவர்களின் 119வது பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (26.06.2024) அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், ம.பொ.சி அவர்களின் குடும்பத்தினர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

## தமிழ்நாட்டில் பழங்குடியினர் தம் மரபு வழி அறிய

# பாரம்பரிய அறிவு களஞ்சியம் உருவாக்கப்படுமா?

## பேரவையில் திருப்பூர் க.செல்வராஜ் கேள்வி!

சென்னை, ஜூன் 27-

சட்டப்பேரவையில் திருப்பூர் தெற்குத் தொகுதி உறுப்பினர் க. செல்வராஜ் கேட்ட கேள்வியைத் தொடர்ந்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

தமிழ்நாட்டில் உள்ள பழங்குடியினர் தம் மரபு வழி அறிவினை பதிவு செய்யும் வகையில் பாரம்பரிய அறிவு களஞ்சியம் (Traditional Knowledge Repository) ஒன்றினை உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



**அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ்**, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: தமிழ்நாட்டில் வசிக்கும் பழங்குடியினர்களின் வாழ்க்கைமுறை கலாச்சாரம், பண்பாடு, மொழி, பொருளாதாரம் மற்றும் கல்வி நிலை குறித்த ஆய்வுகள் செய்வதற்காக 1983-84 ஆம் நிதியாண்டில் நீலகிரி மாவட்ட மூ.பாலாடா என்ற இடத்தில் பழங்குடியினர் ஆய்வு மையம் தொடங்கப்பட்டது. 2023-2024 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் ரூ.48 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கோயம்புத்தூர் மாவட்டத்தில் வசிக்கும் பழங்குடிகளான இரவலர், காடர், முதுவான், மலைசர், இருளர் மற்றும் மலைமலசர் ஆகிய பழங்குடியினர்களின் இனவரவியல் மற்றும் ஒலி, ஒளி ஆவணப்படுத்தும் பணிகள் துரிதமாகச் செயல்படுத்தப்பட்டு, விரைவில் இப்பணிகள் முடிக்கப்படவுள்ளது.

**க. செல்வராஜ்:** அமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன் பேரவைத் தலைவர் அவர்களே, துணைக் கேள்வியாக ஒரு கேள்வி.

திராவிட மாடல் ஆட்சியைத் தந்து கொண்டிருக்கக் கூடிய நம்முடைய தமிழகத்தின் முதல்வர், அவரின் ஆட்சியில் இன்றைக்கு ஏழையெளிய மக்கள், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு நம்பிக்கை மிகுந்த ஒரு தலைவராக, முதல்வராக இருந்து கொண்டிருக்கிறார்கள். கோவை, திருப்பூர், ஈரோடு உள்ளிட்ட கொங்குமண்டலப் பகுதிகளில் இலட்சக்கணக்கான ஆதி திராவிட மக்கள் வசித்து வருகிறார்கள். அவர்களுக்கு தேவைக்கேற்ப ஊராட்சி வாரியாக இடங்களைக் கண்டறிந்து NABARD திட்டத்தின்மூலம் சமுதாய நலக் கூடங்கள் அமைத்துத் தரப்படுமா என்றும், அதேபோல் மாநகர, நகர, பேரூராட்சிப் பகுதிகளிலுள்ள ஆதி திராவிட மக்கள் வசிக்கும் பகுதிகளில் சாலை, குடிநீர், மேல்நிலைத் தொட்டி, தெரு விளக்கு, சாக்கடை, பொதுக் கழிப்பிட வசதி என மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து தரவேண்டும்.

**அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ்:** உறுப்பினர் அவர்கள் கோரியபடி கோவை, திருப்பூர், ஈரோடு அகிய கொங்குமண்டலப் பகுதிகளில், ஆதி திராவிட மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளில் தேவையான இடங்களைக் கண்டறிந்து, சமுதாய நலக் கூடங்கள் அமைத்துத் தரப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல், முதலமைச்சர் அவர்கள், அயோத்திதாசப் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டு திட்டம் என்ற திட்டத்தை சென்ற ஆண்டு அறிவித்திருக்கிறார்கள். ஊரகப் பகுதிகளில் ரூ.100 கோடி அளவில் உட்கட்டமைப்பு வசதிகளை செய்து தருவது ஏற்கெனவே நம்முடைய துறையின் மூலமாகச் செயல்பட்டு வந்தாலும், சென்ற ஆண்டிலிருந்து நகர்ப்புறங்களிலும், பேரூராட்சிப் பகுதிகளிலும் சுமார் ரூ.100 கோடி அளவில், அடிப்படை வசதிகளான சாலை வசதி, குடிநீர் வசதி, தெரு விளக்கு போன்ற வசதிகளும் செய்து தரப்படுகின்றன .

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்

## ஜூன் 27 (1962)



திராவிட இயக்க வரலாற்றில் 1938ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஒருமைல் கல்லாகும். இந்தப் போராட்டத்தில் திருச்சி, உறையூர் முதல் சென்னை வரை 42 நாட்கள் இந்தி எதிர்ப்பு பேரணி நடைபெற்றது. இப்பேரணியில் 577 மைல்கள் நடந்தே வந்தவர் இவர். 87 பொதுக் கூட்டங்களில் உரையாற்றியுள்ளார்.

மேலும், சென்னையில் பள்ளி முன் இந்தி திணிப்பை எதிர்த்து, மறியல் செய்து கைது செய்யப்பட்டு ஆறு மாதங்கள் வேலூர் சிறையில் இருந்தார்.

இவரின் 50 ஆண்டுகால பொது வாழ்க்கைக்கு அவர் வாழும்போதே பெற்ற ஒரே அங்கீகாரம் தி.மு.க. சார்பில் அண்ணா வழங்கிய விருதுதான். சுயமரியாதை இயக்கத்திற்காக உழைத்தவர்களுக்கு தி.மு.க. சார்பில் விருது வழங்கி சிறப்பிக்க அண்ணா முடிவு செய்தார். இதற்கு இவருடைய பெயரைத்தான் அண்ணா முதன்முதலில் தேர்வு செய்தார்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1989ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக தமிழக முதல்வராக பொறுப்பேற்றபோது, முதல்முறையாக ஏழைப்பெண்கள் திருமண உதவித் திட்டத்தை தொடங்கி வைத்து அதற்கு “மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம்” என்று இவரது பெயரை வைத்து, தொடர்ந்து செயல்படுத்தினார்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

# சி.பி.ஐ விசாரணை கேட்கும் எடப்பாடிகளுக்கு ஜெயலலிதா வழங்கிய அறிவுரைகள் என்ன?...

அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், 40-க்கு 40 இடங்களில் தி.மு.க தலைமையிலான இந்தியா கூட்டணி அமோக வெற்றி பெற்றது. தோல்வியில் மண்ணைக் கவ்விய அ.தி.மு.க, கூட்டணிக் கட்சிகளும், பா.ஜ.க கூட்டணிகளும் பித்துப் பிடித்த நிலையில் தமிழக வீதிகளில் ஒப்பாரி வைத்துத் தலைவிரிக் கோலமாக அலைகின்றன.

கள்ளக்குறிச்சி விஷ சாராய விவகாரத்தில், அரசியல் ஆதாயம் தேடுவதற்காக எடப்பாடிகளும், அன்புமணி இராமதாசுகளும் தமிழிசைகளும், அண்ணாமலைகளும் வரிந்து கட்டிக்கொண்டு வசைபாடி நிற்கிறார்கள். இவ்விவ காரத்தில் தொடர்புடைய குற்றவாளிகள் பலர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். இறந்த குடும்பத்தினருக்கு நிவாரண நிதி தந்ததுடன், பெற்றோரை இழந்த பிள்ளைகளின் எதிர்காலக் கல்வி வாழ்க்கைப் பொறுப்பை அரசு ஏற்றுள்ளது. அத்துடன் மாவட்ட ஆட்சியர் மாற்றம், காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் அதிகாரிகள் இடைநீக்கம், மதுவிலக்குத் துறை துணை இயக்குநரகத் தலைவர் கட்டாயக் காத்திருப்பில் வைத்திருப்பு, கள்ளச்சாராயம் ஒழிப்புத் தீவிர நடவடிக்கை, இவ் விவகாரத்தை விசாரிக்க நீதியரசர் கோகுல்தாஸ் தலைமையில் விசாரணை ஆணையக் குழு அமைப்பு, சி.பி.சி.ஐ.டி பிரிவினர் கள்ளச் சாராயச்சாவு குறித்த விவகாரத்தை விசாரிக்க உத்தரவு என முதல்வர் தளபதி அனைத்து விதமான கட்டளைகளைப் பிறப்பித்துள்ளார்.

ஆனால் விக்கிரவாண்டி இடைத்தேர்தலை மனதில் கொண்டு, எடப்பாடிகள் கூட்டம் நாள்தோறும் கருப்பு சட்டை அணிந்து வந்து, சட்டமன்றத்தை முடக்க கலகம் செய்து வருகிறது. அண்ணாமலை, தமிழிசை போன்றோர் தமிழ்நாடு ஆளுநரைச் சந்தித்து முறையிட்டு வந்துள்ளனர். தமிழ்நாடு முதல்வர் இவ்விவகாரத்தில், அரசு எடுத்த அனைத்து முடிவுகளையும் எடுத்துக் கூறியும், தங்களது ஆணவ, அராஜகப் போக்கை மாற்றிக் கொள்ளவில்லை.

இவ் விவகாரத்தில் அ.தி.மு.க.வும், பா.ஜ.க.வும் சி.பி.ஐ விசாரணை வேண்டும் என்று தொடர்ந்து முறையிடுகிறார்கள். ஒன்றிய அரசு நடத்தும் மோடியின் ஆட்சியிலும், பாஜக ஆளும் மாநிலங்களிலும், பல்வேறு சம்பவங்களில் இது போன்ற சிபிஐ விசாரணை கேட்டு அண்ணாமலையும் தமிழிசையும் மற்றவர்களும் கொடி பிடித்தார்களா?, கோஷம் போட்டார்களா? அதைப்போல அதிமுக ஆட்சியில், ஜெயலலிதா, எடப்பாடி முதலமைச்சராக இருந்தபோது இது போன்று நடைபெற்ற சம்பவங்களுக்கு எல்லாம் ,எப்போது சிபிஐ விசாரணை நடத்திட முன் வந்தார்கள் .....?

நடைபெற்ற துயரச் சம்பவத்தை யாரும் நியாயப்படுத்த முன் வரவில்லை. அதே நேரத்தில் தேவையான நிருவாக ரீதியாகச் சட்ட நடவடிக்கைகளைத் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்கள் எடுத்து வருகின்றார். இருந்தாலும் அதனை புறக்கணித்துவிட்டு அநீதி முறையில் போராட்டங்கள் நடத்தி, சி.பி.ஐ புலன் விசாரணை கோரும் கட்சிகள், விவகாரத்தை கையில் எடுத்துக் கொண்டு, தேவையற்ற முறையில், காந்தாரித்தனமாகப் பெரிதாக்கி வருகின்றன. நீதி விசாரணையை சி.பி.ஐக்கு விட வேண்டும் என்று கூறுவது எந்த விதத்தில் நியாயம்? என்பதைச் சிந்திக்க வேண்டும்!

கள்ளக்குறிச்சி விவகாரத்தில் சிபிஜ விசாரணை கோரும் எடப்பாடிகள், அவர்களுடைய அம்மா புரட்சித் தலைவி ஜெயலலிதா(?) முதல்வராக இருந்த போது, திருச்செங்கோடு காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளராக இருந்த விஷ்ணுபிரியாவின் மரணம் குறித்து, திமுக தலைவர் கலைஞர் உள்ளிட்ட எதிர்க்கட்சித் தலைவர்கள் சி.பி.ஐ விசாரணை கேட்டனர். அவ்வாறே விஷ்ணுபிரியாவின் தந்தை ஓய்வு பெற்ற காவல் துறை கண்காணிப்பாளர் ரவியும் கேட்டார். சட்டமன்றத்தில் காவல்துறை மானியத்தில் தி.மு.க உறுப்பினராக இருந்த எ.வ.வேலு, டி.எஸ்.பி. விஷ்ணு பிரியா சாவு விவகாரத்தில் சிபிஜ விசாரணை கேட்டுப் பேசினார் .அப்போது முதல்வராக இருந்த ஜெயலலிதா குறுக்கிட்டு சிபிஜ விசாரணை தேவையில்லை என்று நீண்ட விளக்கத்தைத் தந்தார். இதோ அவர் பேசிய அந்த அவை நடவடிக்கைகளை அப்படியே தருகிறேன்.

சி.பி.ஐ விசாரணை குறித்து முதல்வராக இருந்த ஜெயலலிதா கூறியது என்ன?



கவிஞர்
**தமிழ்தாசன்**
தி.மு.க.
தீர்மானக் குழுத் தலைவர்

“மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துணை கண்காணிப்பாளர் செல்வி விஷ்ணு பிரியா தற்கொலை குறித்து, தீவிர புலன் விசாரணை மேற்கொண்டு உண்மையைக் கண்டறிய ஏதுவாக இவ்வழக்கு தற்போது மாநிலக் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு மாற்றம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், இவ்வழக்குடன் விஷ்ணு பிரியா புலன் விசாரணை செய்து வந்த கோகுல்ராஜ் கொலை வழக்கும் மாநிலக் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அப்பிரிவினர் இவ்வழக்குகளில் தொடர்ந்து புலன் விசாரணை மேற்காண்டு வருகின்றனர். எனவே செல்வி விஷ்ணு பிரியா தற்கொலை குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு விட எந்த அவசியமும் எழவில்லை. சி.பி.ஐ. விசாரணைத்தான் சரியான பாதையில் இருக்கும் என்பதும், சி.பி.சி.ஐ.டி. விசாரணை அவ்வாறு இருக்காது எனக் கூறுவதும் தவறான கருத்து என்பதை முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சிறுவன் தில்ஷன் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்ட வழக்கு, தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தில் பணிபுரிந்து வந்த உமா மகேஸ்வரி கொலை, மருத்துவர் எம்மா கொன்சால்வஸ் கொலை போன்ற வழக்குகள் சி.பி.சி.ஐ.டி. பிரிவால் சரியாக புலன் விசாரணை செய்யப்பட்டு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இங்கே நான் சுட்டிக்காட்டியது ஒரு சில உதாரணங்கள்தான். சி.பி.ஐ. விசாரணை மட்டுமே நேர்மையான விசாரணை என்ற கருத்து சரியானது அல்ல. அகில இந்திய அளவில் பரபரப்பாக உள்ள ஒரு முக்கிய வழக்கில் சி.பி.ஐ. முன்னாள் இயக்குநர் மீதே குற்றம் சுமத்தப்பட்டு, உச்ச நீதிமன்ற விசாரணையிலும் அது உள்ளது என்பதை இங்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் தமிழகத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்ட ஒரு சில வழக்குகள் உச்ச நீதிமன்ற உத்தரவிற்குப் பிறகே சி.பி.ஐ. –ஆல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது என்பதையும் இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். வெளிநாட்டுக் கார் இறக்குமதி வரி ஏய்ப்புத் தொடர்பான வழக்கில் தமிழகத்தில் ஒருவரை சுமார் 1 வருடங்களுக்கு முன்னால் சி.பி.ஐ. கைது செய்து, விசாரணை செய்தது. அந்த வழக்கு இன்னமும் நிலுவையில் உள்ளது.

ஆனால் அதே குற்றச்சாட்டுக்கு உள்ளான வேறு சிலரை சி.பி.ஐ. கைது செய்யவில்லை. வழக்கறிஞர் சங்கர சுப்பு அவர்களது மகன் கொல்லப்பட்ட வழக்கை சி.பி.ஐ. விசாரணை செய்து, வழக்கை முடிவுக்கு கொண்டு வர கோரியது. இதனை எற்றுக்கொள்ளாத சென்னை உயர் நீதிமன்றம், 07-12-2012 தேதியில் பணி நிறைவு செய்த காவல் துறை உயர் அதிகாரி ராகவன் தலைமையில் விசாரணை நடத்த உத்தரவிட்டு, அந்த விசாரணை இன்னமும் நிலுவையில் உள்ளது. உடுமலைப்பேட்டை காவல் துறை யினரால் சந்திரா என்பவர் துன்புறுத்தப்பட்டதாக சொல்லப்பட்டக் குற்றச்சாட்டில் சென்னை உயர் நீதிமன்றம், 24-09-2014 அன்று சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டது. சுமார் 1 வருடத்திற்குப் பின்னரும் சி.பி.ஐ. இந்த விசாரணையை முடிக்கவில்லை. எனவே, சி.பி.ஐ. விசாரணையே சரியானதாக இருக்கும் எனச் சொல்லப்படுவது ஒருவருடைய தனிப்பட்ட கருத்துதானே தவிர, உண்மை நிலையின் அடிப்படையில் சொல்லப்படுவது அன்று. எனவே, இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு உட்படுத்தவேண்டிய அவசியம் இல்லை.

விஷ்ணு பிரியா தற்கொலை வழக்கானது சி.பி.ஐ. விசாரிக்கும் அளவுக்கு மிக சிக்கலான வழக்கு அல்ல. சி.பி.சி.ஐ.டி. - யே இந்த வழக்கை நடுநிலையுடன் விரைவாகப் புலன் விசாரணையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.” (தமிழ்நாடு சட்டமன்றம் செப்டம்பர் 22, 2015)

சி.பி.ஐ. விசாரணை கோரும் எடப்பாடி தலைமையில் ஆன அ.தி.மு.க.வினர் இதற்கு என்ன பதில் கூறப் போகிறார்கள்?